அப்போஸ்தலருடைய நடபடிகள்

Sword of the Spirit

ஆசிரியர் குறிப்பு:

1. அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் இயேசுவின் வாழ்க்கையை குறித்து முன்னதாக ஒரு பிரபந்தத்தை எழுதியிருக்கிறார். (லூக்கா)
2. அப்போஸ்தலர் மற்றும் லூக்கா இரண்டும் "தெயோப்பிலு"("கர்த்தரால் நேசிக்கப்பட்டவன்") என்பவருக்கு எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. லூக்கா மருத்துவரானதால் (கொலோ4:14). மூல மொழியில், மருத்துவர்கள் பண்புரீதியாக பயன்படுத்தப்படும் பல சொற்களை பயன்படுத்தியுள்ளார்.
4. அப்போஸ்தலர்களின் செயல்கள், ஆரம்பகால தேவாலயத்தின் வரலாறு (ஆதி திருச்சபையின் அரம்ப காலங்கள்) மற்றும் சுவிசேஷம் பரவிய விதம் (அப்1: 8), இவற்றை விவரித்துக் கூறுகிறார்.
5. லூக்காவின் பிரபந்தங்களை வாசிப்பவர்கள், கொடுக்கப்பட்டுள்ள விசேஷங்களின் நிச்சயத்தை அறிய வேண்டும் என்று விரும்புகிறார்.

அப் 1:8 நிறைவேறுதல்

- எருசலேமில் சுவிசேஷம்(அப். 1-7)
- யூதேயா மற்றும் சமாரியாவில் சுவிசேஷம் பரவுதல் (அப். 8-12)
- பூமியின் கடைசிபரியந்தமும் சுவிசேஷம் பரவுதல் (அப். 13- 28)

Sword of the Spirit

புத்தகத்தின் கருப்பொருள்

- அப்போஸ்தலர்களின் செயல்கள், ஆரம்பகால சபையின் வரலாறு (ஆதி திருச்சபை) மற்றும் சுவிசேஷம் பரவிய விதம் போன்ற காரியங்களை விளக்குகின்றது (அப்1: 8).
- இது அப்போஸ்தலர்கள் அனைவரின் அனைத்து செயல்களின் பதிவு அல்ல, மாறாக சில அப்போஸ்தலர்களின் சில செயல்களின் பதிவு.
- இயேசுவே கிறிஸ்து என்பதற்கும், தேவனின் திட்டம் என்ன எனபதன் வெளிப்பாட்டிற்கும் சான்றுகளை அளிக்கிறது.
- நம் விசுவாசம் எதிலிருக்கிறது என்பதையும் ,பிறரை நம்முடைய விசுவாசத்தின் சாட்சியினிமித்தம் , சிலுவையின் பாதையில் நடத்துவதற்கான வழிமுறைகளையும் இப்புத்தகம் நமக்கு விளக்குகிறது
  - (அ) யூதர்கள் தேவனையும், பழைய ஏற்பாட்டையும் நம்பினர், ஆனால் இயேசுவையும் சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி தூண்டப்படவில்லை.
  - (ஆ) புறஜாதியார் மெய்தேவனை அறிந்திருக்கவில்லை, எனவே அவர்கள் இயேசுவை மட்டுமல்ல, தேவனையும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் தெளிவைக் கொடுக்கின்றது.
- இது அப்போஸ்தலர்கள் மூலம் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைப் பற்றிய விளக்கங்களை நமக்குத் தருகிறது.
- பரிசுத்த ஆவியானவர் ஞானஸ்நானம், தீர்க்கதரிசனம், அற்புதங்கள், அப்போஸ்தலர்களின் கைகள் வைத்தல் போன்றவற்றைப் புரிந்துகொள்ள இது நமக்கு உதவுகிறது.
- இது ஆராதனை மற்றும் தேவாலயம் (பெயர்கள், அமைப்பு, தோற்றம் போன்றவை) பற்றிய பல அடிப்படை சுவிசேஷ உண்மைகளை கற்பிக்கிறது.
- மற்றவர்களுக்கு நற்செய்தியை எவ்வாறு அறிவிப்பது என்பதைக் காட்டும் சிறந்த எடுத்துக்காட்டுகளை இது தருகிறது - சிறந்த கற்பித்தல் முறைகள், அணுகுமுறைகள், எதிர்ப்புகளை மேற்கொள்ளும் முறைகள்.... முதலியன.

Sword of the Spirit

புத்தகத்தின் அமைப்பு

எருசலேம்

அப் 1-7

யூதேயா , சமாரியா

அப் 8 - 12

பூமியின் கடைசி பரியந்தம்
(ஆசியா,ஐரோப்பா,ரோமாபுரி)

அப் 13 - 28

யூதர்கள்

புறஜாதிகள்

பேதுரு . . . . ► **பவுல்**

ஸ்தேவான் . . . . பிலிப்பு . . யாக்கோபு . . . . . . பவுலின் மிஷனரி பயணங்கள்

Sword of the Spirit

அப்போஸ்தலர் 1 :8.
பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

சுவிசேஷம்	கேட்டவர்கள்	பிரசங்கித்தவர்கள்	காலம்	அதிகாரம்
எருசலேம்	யூதர்கள்	பேதுரு	2 வருடங்கள்	1:1 - 2:4
யூதேயா & சமாரியா	சமாரியர்கள்	பிலிப்பு	13 வருடங்கள்	2:5 - 12:25
பூமியின் கடைசிபரியந்தம்	புறஜாதிகள்	பவுல்	14 வருடங்கள்	13:1 - 28:31

Sword of the Spirit

முதன்முதல்



Sword of the Spirit

பேதுரு	பெந்தெகொஸ்தே நாளில் கூடின ஜனங்கள்	அப் 2:14 - 40
பேதுரு	தேவாலயத்துக்கு வந்த ஜனங்கள்	அப் 3:12 - 26
பேதுரு	ஜனத்தின் அதிகாரிகள், வேதபாரகர் கூடும் ஆலோசனைச் சங்கம்	அப் 4:5- 12
பேதுரு	கொர்னெலியுவும் அவன் வீட்டாரும்	அப் 10:28 - 47
பேதுரு	எருசலேமின் தேவாலயம்	அப் 11:4 - 18
பேதுரு	அப்போஸ்தலர்,மூப்ப்ர்கள் கூடும் இடம்	அப் 15:7 - 11
ஸ்தேவான்	ஜனத்தின் அதிகாரிகள், வேதபாரகர் கூடும் ஆலோசனைச் சங்கம்	அப் 7
யாக்கோபு	அப்போஸ்தலர்,மூப்ப்ர்கள் கூடும் இடம்	அப் 15:13 - 21
பவுல்	யூதர்கள், பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா	அப் 13:16 - 41
பவுல்	அத்தேனே பட்டணத்தார்	அப் 17:22 - 31
பவுல்	எபேசு சபையின் மூப்பர்	அப் 20:17 - 35
பவுல்	எருசலேம் ஜனத்தார்	அப் 22:1 - 21
பவுல்	ஜனத்தின் அதிகாரிகள், வேதபாரகர் கூடும் ஆலோசனைச் சங்கம்	அப் 23:1 - 6
பவுல்	பேலிக்ஸ்,துருசில்லா	அப் 24:14 - 16,24,25
பவுல்	அகிரிப்பா ராஜா,பெர்னிக்கேயாள்,பெஸ்து	அப் 26 :2 - 23

அப்போஸ்தலருடைய நடபடிகளில் இயேசு கிறிஸ்துவின் பாதையில் சிலர்........

அப்போஸ்தலன் பேதுரு(கேபா):

- இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாக பெத்சாயிதாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டான்.(லூக்.6:13,14)(யோ1:44)
- அவன் அந்த சேவையில் தன்னை விசுவாசமுள்ளவனன், தலைசிறந்தவன் என்று வேறுபடுத்தும்வண்ணமாக, அடிக்கடி சிந்தித்து விஷயங்களைச் செயல்படுத்தாமல் இயேசுவினால் கடிந்து கொள்ளப்பட்டான்.(மத் 16:23)
- சீஷனாக இருந்த ஆரம்ப காலத்தைத் தொடர்ந்து, சிலுவைப்பாதையில் இயேசு கிறிஸ்துவை மறுதலித்திருந்தாலும், பின்னர் கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியானவர்ரல் பெலனடைந்து தனது பல தவறுகளை வென்றுவிட்டான்.(அப்.2:14)
- அவன் இரண்டு நிருபங்களை எழுதினான், அவன் இறக்கும் வரை சுவிசேஷத்தை நிலைநிறுத்தினான், அந்தியோகியாவில் உள்ள புறஜாதிரை யூதர்கள் நிமித்தம் ஒதுக்கி வைத்த காரியத்தில்(கலா2:11-13) தோல்வியுற்றான்.

Sword of the Spirit

அப்போஸ்தலன் பவுல்(சவுல்) :

- பெரும்பான்மையான புறஜாதி பகுதிகளில் வாழ்ந்த யூதர்கள் பொதுவாக 2 பெயர்களைக் (ஒரு எபிரேய பெயர் மற்றும் பிரதான கலாச்சாரத்திலிருந்து ஒரு பெயற்) கொண்டுள்ளனர்.சவுல் யூதரல்லாதவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்ததால் அவனுடைய ரோமானிய பெயரால் பவுல் என்று அழைக்கப்பட்டான்.
- தர்சு பட்டணத்தானாகிய சவுலின் மாற்றம் , இயேசு தன்னை பிதாவால் அனுப்பப்பட்டவர் என்று கூறியதற்கு ஒரு மிகப்பெரிய சாட்சி.(அப்.9:6)
- சபையைத் துன்புறுத்தி , அதைப் பாழாக்கினவனையே தன்னை அறிக்கைப் பண்ணும்படி தெரிந்துகொண்டதினிமித்தம், இயேசுவே தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்கிறார் தேவன்.(அப்.13:2,3)
- தர்சுவின் சவுல் சுவிசேஷத்தைப் பரப்புவதை கடுமையாக எதிர்த்திருந்தாலும், கிற்ஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையின் உபதேசத்தை பிரசங்கிப்பதிலும்,பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துவதிலும் தீவிரமாக இருந்தான்.(அப்.15:36)

Sword of the Spirit

சுவிசேஷகன் பிலிப்பு :

- சபை உறுப்பினர்கள், கிரேக்க விதவைகள் நடத்தப்படுகிற விதத்தினால் எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுத்த காரியத்தில் ஊழியம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவனான சுவிசேஷகனில் பிலிப்புவும் ஒருவன். சுவிசேஷத்திற்கு அவனுடைய பங்களிப்பு பெரிது.(அப்.6:1-5)
- அப்.8 இல் சமாரியாவில் அவனுடைய ஊழியமும் ,எருசலேமுக்கும் காசாவிற்கும் இடையிலான வனாந்தர பாதையில் அவன் மந்திரிக்கு விளக்கின காரியமும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- செசரியா பட்டணத்தானாகிய பிலிப்பு ஒரு அமைதியான பாத்திரம். ஆனால் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை பரப்புவதில் அவரது தைரியமும், செயல்திறனும் பெரிதாய்ப் பேசப்படுகிறது.

பர்னபா(யோசே):

- ஆறுதலின் மகன், அப். 4: 36-37-ல் “அப்போஸ்தலர்களால் பர்னபா” என்றும் அழைக்கப்பட்ட யோசே.
- சவுலை சேர்த்துக்கொண்டு அவனைக் குறித்தான சாட்சியை அப்போஸ்தலர்களுடன் பகிர்ந்து கொண்டான்.(9.26,27)
- தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று ,கிரயத்தை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்தான்.(4:37)
- சீப்புரு தீவானாகிய இவன் ,மாற்கு என்பவனிநிமித்தம் பவுலோடு எற்பட்ட மனவேறுபாட்டால் பவுலை விட்டுப் பிரிந்துபோனான் (15:36 - 39)

ஸ்தேவான்:

- சபை உறுப்பினர்கள் , கிரேக்க விதவைகள் நடத்தப்படுகிற விதத்தினால் எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுத்த காரியத்தில் ஊழியம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவன் .
- விசுவாசத்தினாலும் ,வல்லமையினானாலும் நிறைந்தவனாக ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.(6:8)
- ஆலோசனை சங்கத்தார் அவன் முகம் தேவதூதன் முகம் போல் இருக்கக் கண்டார்கள்.(6:15)
- தேவதூஷணம் சொல்வதாகக் கூறி அவனை கல்லெறிந்தார்கள்.(6:11,7:58).(முதல் இரத்த சாட்சி)
- மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதைக் கண்டான்.(7: 56)

Sword of the Spirit

அப்.4 >> இயேசு கிறிஸ்துவால் அன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை

- 5 - 11 : பேதுருவும் யோவானும் ஆலோசனை சங்கத்தாரால் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள்
- 13 - 22 : விசாரணை,தீர்ப்பு
  - பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறிவில்லாதவ்ர்கள் என்றும் , பேதமை உள்ளவர்கள் என்றும் அறிந்த படியினாலே ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவுடன் கூட இருந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள்.
  - பேதுருவையும் யோவானையும் பயமுறுத்த எண்ணி , இயேசுவின் நாமத்தை குறித்து எவ்வளவு பேசும் போதிக்கவும் கூடாது என்று கட்டளையிட்டார்கள்.
  - அவர்களோ தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நினைத்துப் பாருங்கள் என்றார்கள்.
- 23 - 31 : சுவிசேஷம் பரவுதல்
  - அப்போஸ்தலர்கள் விடுதலையாக்கப்பட்டு தங்களை சேர்ந்தவர்களிடத்தில் வந்து ஒருமனப்பட்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார்கள்.

Sword of the Spirit

அப்.4: 32 - 5:11 >> எருசலேம் சபை

- 4:32 - 37 :பூரண கிருபை
  - அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள் . அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாகி இருந்தது.
  - சீப்புரு தீவானும், லேவியனும் ஆறுதலின் மகன் என்று அர்த்தம் கொள்ளும் பர்னபா அறிமுகம்.
- 5::1 - 11 :அனனியா சப்பீராள் தேவனிடத்தில் பொய் சொன்ன படியால் ஜீவனை விட்டார்கள். இவைகளை கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று.

Sword of the Spirit

அப்.5:12 - 42 >> கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வைராக்கியம் கொண்டிருந்த அப்போஸ்தலர்கள்

- 12 - 16 : திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி , கர்த்தரிடமாக அதிக அதிகமாய் சேர்க்கப்பட்டார்கள்.
- 17 - 33 :
  - பிரதான ஆசாரியன் , சதுசேயர் சமயத்தவர் அனைவரும் பொறாமையினால் நிறைந்து அப்போஸ்தலர்களைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.
  - கர்த்தருடைய தூதன் அவர்களை விடுவித்தல்.
  - மறுபடியும் அழைத்துக்கொண்டு வந்து விசாரணை.
  - **நியாயசாஸ்திரியாகிய கமாலியேல்:**
    - ➔ தெயுதாஸ்,யூதாஸின் கிரியயைகள் மசுஷரால் உண்டாயிருந்ததினால் ஒழிந்து போயிற்று.
    - ➔ இவர்கள் காரியம் தேவனால் உண்டாயிருந்ததானால் ,அதை ஒழித்து விட உங்களால் கூடாது.
  - அப்போஸ்தலர்கள் அடிக்கப்பட்டபோதிலும் சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய் தினம்தோறும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்.

அப்.6: 1 - 7 >> எருசலேம் சபை

- சபைக்குள் முறுமுறுப்பு,தீர்வு
- தேவ வசனம் விருத்தியடைந்தது எருசலேமில் சீஷருடைய தொகை மிகவும் பெரியது

அப்.6: 8 - அப்.7 >> ஸ்தேவான்

- ஸ்தேவான் :: வணங்கா கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்.
- இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று அவன் தொழுது கொள்ளுகையில் அவனைக் கல்லெறிந்தார்கள்.

Sword of the Spirit

அப்.8 >> சபைக்கு மிகுந்த துன்பம், எங்கும் சுவிசேஷம் பரவுதல்

- 1 - 4 : சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள்.
- 5 - 13 : பிலிப்புவினிமித்தம் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.
- 14 - 17 : பேதுருவும், யோவானும் வந்து அவர்களுக்காக ஜெபம் பண்ணி , கைகளை வைத்த போது பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.
- 18 - 24 : மாயவித்தைக்காரனயிருந்து ஞானஸ்னாம் பெற்றுக் கொண்ட சீமோனின் நிலை.
- 25 - 40 : பிலிப்பு ஆவியானவர் சொன்னதின்படி , எத்தியோப்பிய ராஜஸ்திரீ கந்தாகே என்பவளுக்கு மந்திரியான ஒருவனை வழியில் கண்டு , ஏசாயாவின் வார்த்தைகளை விவரிக்க , அந்த எத்தியோப்பியன் ஞானஸ்னானம் பெற்றான்.

Sword of the Spirit

அப். 9 - 12

- ❑ **ஸ்தேவானுக்காக தேவபக்தியுள்ள மனிதர்கள் துக்கங்கொண்டாடினார்கள்.**
- ❑ **பிலிப்பு, பேதுரு , யோவான் சமாரியாவிலும், யூதேயாவின் சுற்றுப்புறங்களிலும் ஊழியஞ் செய்து வந்தார்கள்.**
- ❑ **தமஸ்குவின் வழியில் இயேசு சவுலுக்கு தரிசனமானார்,**
- ❑ **புறஜாதிகள் சபைக்குப் புறம்பானவர்களல்ல என்று பேதுருவுக்கு வெளிப்படுத்தப்பட்டது.**
- ❑ **கொர்னேலியுவும் அவன் வீட்டாரும் ஞானஸ்னானம் பெற்றார்கள்.**
- ❑ **யோவானின் சகோதரனாகிய யாக்கோபு இரத்தசாட்சியாய் மரித்தான்.(பட்டயத்தினால் கொலை செய்யப்பட்டான்)**

- ❖ கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்கு **தமஸ்கு**வுக்கு சவுல் செல்கிறான்.இயேசு கிறிஸ்துவை தரிசித்து மனம்மாறுகிறான் - (அப். 9)
- ❖ இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தி தமஸ்குவில் யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.
- ❖ **அரபி தேசத்திற்குப்** புறப்பட்டுப் போய்,மறுபடியும் தமஸ்குவுக்கு வந்தான்.(கலா 1:17)
- ❖ தமஸ்குவிலிருந்து **எருசலேமுக்கு** வந்தான்.(அப் 9:25,26)
- ❖ சகோதரர் பவுலை **செசரியா**வுக்கு அழைத்துக்கொண்டு போய் **தர்சு**வுக்கு அனுப்பி விட்டார்கள்.(அப் 9:30)(கலா 1:21)
- ❖ ஒரு வருடம் **அந்தியோகியா**வில் பர்னபாவுடன்.(அப் 11:26)
- ❖ பர்னபாவும் ,பவுலும் சகோதரருக்கு உதவியாக சேகரிக்கப்பட்ட பணத்தை யூதேயாவுக்கு எடுத்துச் சென்றார்கள்.(அப் 11:30)
- ❖ எருசலேமை விட்டு அந்தியோகியாவுக்கு திரும்பினார்கள்.(அப் 12:25)

Sword of the Spirit

அப் .9 >> சவுல் (கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரம்)

- சவுல் சிலிசியாவில் உள்ள கிரேக்க நகரமான தர்சு பட்டணத்தில் பிறந்தான்.(21:39).
- பிறப்பால் ஒரு ரோமானிய குடிமகனாக இருந்தான்.(16:37)
- மேலும் “எபிரேய மொழி” (அநேகமாக அராமைக்) மற்றும் கிரேக்கம் (21: 37-40) பேசினான்.
- பென்யமீன் வம்சாவளியைச் சேர்ந்த யூதனாக இருந்தான். (ரோமர் 11:1)
- பரிசேயன்(23: 6)
- கனம்பொருந்திய கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தான்.(22:3)
- தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவனாயிருந்தான்.

❖ 1 - 8: உயிர்தெழுந்த இயேசு சவுலுக்கு தரிசனம்.

❖ 9 - 18: 3 நாள் பார்வையில்லாதவனாயிருந்தான்.அனனியா என்னும் சீஷன் கர்த்தரால் அனுப்பப்பட்டதினிமித்தம் சவுல் பார்வையடைந்து,ஞானஸ்னானம் பெற்றான். கர்த்தர்:என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டுமென்பதை

❖ 19 - 30: சவுல் அதிகமாய்த் திடன் கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தபடுத்தினான்.யூதர்கள் கலக்கம் , கிரேக்கர்களொடு தர்க்கம், தர்சுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

❖ 32 - 40: பேதுருவால் நடந்த அற்புதம் :

➢ **லித்தா ஊர்** - 8 வருடம் திமிர்வாதமுள்ள்வனாய்க் கிடந்த ஐனேயா எழுந்திருந்தான்.

➢ **யோப்பா பட்டணம்** - தொற்காள்(தபீத்தாள்) மரித்தவள் உயிரோடெழுந்தாள்.

❖ 41 - 43: அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.



Sword of the Spirit

அப்.10 >> கொர்நேலியு

- 1 - 8 : இத்தாலியா பட்டாளத்தின் நூற்றுக்கு அதிபதி **செசரியா** பட்டணத்தில் இருந்தான். தேவதூதன் பிரத்யட்சமாய் அவனுக்கு தரிசனமாகி, பேதுருவை அழைப்பிக்கும்படி கூறினான்.அதற்கு அவன் கீழ்படிந்தான்.
- 9 - 16 :புறஜாதிகளும் சுசேஷத்தை அறியவேண்டும், அவர்கள் தேவனுக்கு அன்னியரல்ல,அவர்களையும் மீட்கவே தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார் என்பதை உணர்ந்து கொள்ளும்படியாக பேதுரு ஒரு தரிசனம் கண்டான்.
- 17 - 48 :பேதுரு செசரியா பட்டணத்திற்குச் சென்று,கொர்நேலியுவையும் அவன் வீட்டாரையும் சந்தித்து,தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினதன் நோக்கத்தைக் குறித்துப் பேசினான். வார்த்தைகளைக் கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.கர்த்தருடைய நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்னானம் பெற்றார்கள்.



Sword of the Spirit

அப்.11 >> பேதுரு : “தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்”

- 1 -18 :
  - எருசலேமிலிருந்த விருத்தசேமுள்ளவர்கள் ,பேதுரு விருத்தசேதமுள்ளவ்ர்களிடம் போய் வந்ததினிமித்தம் அவனோடு வாக்குவாதம் பண்ணினார்கள்.
  - பேதுரு தன் க்ண்களால் கண்டதை விளக்கினான்.
  - ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்.
- 19 - 30 :உபத்திரவத்தின் மத்தியிலும் சுவிசேஷம் பரவியது.
  - பர்னபா , சவுலை அழைத்துக்கொண்டு அந்தியோகியாவிலே இருந்தான்.
  - சபை வளர்ச்சி அடந்தது.சீஷர்கள் அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்ப்ட்டார்கள்.
  - அகபு என்னு தீர்க்கத்ரிசியினிமித்தம் உறைக்கப்பட்ட தீர்க்கதிசனம் நிறைவேறியது.
  - கொடிய பஞ்சத்தின் காலத்தில் பணம் சேகரிக்கப்பட்டு ,பர்னபா, சவுல் என்பர்கள் மூலம் மூப்ப்ர்களிடத்திற்கு கொடுத்தனுப்பினார்கள்.

அப்.12 >> யாக்கோபு கொல்லப்பட்டான்,பேதுரு விடுவிக்கப்பட்டான்.

- 1- 2 : ஏரோது சபையை துன்பப்படுத்தினான்.
- 3 - 6 : பேதுரு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான்.
- 7 - 10 : தேவதூதனால் விடுவிக்கப்பட்டான்.
- 11 - 18 : யோவான் (மாற்கு) - தாய் மரியாளின் வீட்டில் அநேகர் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.ரோதை, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள்.
- 19 - 23 : ஏரோது தேவனுக்கு மகிமையை செலுத்தாதபடியினால்,கர்த்தருடயை தூதன் அவனை அடித்தான், அவன் புழுபுழுத்துச் செத்தான்.
- 24 - 25 : பர்னபாவும், சவுலும் மாற்குவுடன் மறுபடியும் அந்தியோகியாவுக்கு போய்ச் சேர்ந்தார்கள்.

Sword of the Spirit

பவுலின் ஊழியப்பாதை

- அப். 13-14 பவுலின் முதல் பயணம் மற்றும் முதல் பதிவு செய்யப்பட்ட பிரசங்கம்.

- அப். 15: 1-41 எருசலேமில் உள்ள சபை

- அப். 16: 1-40
  அப். 17: 1-33 பவுலின் இரண்டாவது பயணம்,
  அப். 18: 1-22

- அப். 18: 23 - 21: 15 பவுலின் மூன்றாம் பயணம்

- அப். 21:15 - 23: 33 எருசலேமில் எதிர்ப்புகள்

- அப். 23: 33 - 26: 32 செசரியாவில்

- அப். 27: 1 - 28: 31 ரோமாபுரியில்

Sword of the Spirit

முதலாம் மிஷனரி பயணம்

Sword of the Spirit

அப்.13,14 >> பவுலின் முதல் மிஷனரி பயணம்

பவுல், பர்னபா பிரித்தெடுக்கப்படுதல்

- ❑ **அந்தியோகியா(இன்று சீரியா)** :: பவுல், பர்னபா
- ❑ **செலூக்கியா** → சீப்புரு தீவு (பர்னபாவின் சொந்த ஊர்)(4)
- ❑ **சாலமி** ::
  யோவான் பவுல்,பர்னபாவோடு ஊழியத்திற்கு உதவிக்காரனாயிருந்தான்.(5)

- ❑ **பாப்போ** ::
- ★ பர்யேசு (எலிமா) - மாயவித்தைக்காரன் - யூதன்
  கள்ளத்தீர்க்கதரிசி → குருடன் (6 -11)
- ★ செர்கியு பவுல் - அதிபதி - தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான்.
  விவேகமுள்ள மனுஷன் → விசுவாசி (6 -12)

- ❑ **பம்பிலியா (பெர்கே)** ::
- ★ யோவான் எருசலேமுக்கு திரும்பிப்போனான்.(13)

- ❑ **பீசிதியா (அந்தியோகியா) (இன்று துருக்கி)**::
- ★ ஜெபஆலயத்தில் பவுலின் உபதேசம் .(14 - 41)
- ★ புறஜாதியார் - இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.
- ★ யூதர்கள் - பொறாமை - தூஷித்தார்கள் - துரத்திவிட்டார்கள் (45 - 50)

Sword of the Spirit

- ❑ **இக்கோனியா ::**
- ★ விசுவாசியாத யூதர்கள் பகையுண்டாக்கினார்கள்.
- ★ பட்டணத்து ஜனங்கள் பிரிந்து ,சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொண்டார்கள்.(14 :1 - 5)

- ❑ **லிக்கவோனியா (லீஸ்திரா,தெர்பை) ::**
- ★ லீஸ்திரா :: பவுல் மூலம் அற்புதம் : பிறவி சப்பாணி குதித்தெழுந்து நடந்தான்.(8 - 10)
- ★ பர்னபா -யூப்பித்தர் , பவுல் - மெர்க்கூரி.(11 - 18)
- ★ அந்தியோகியாவிலும்,இக்கோனியாவிலுமிருந்து வந்த யூதர்கள் ஜனங்களுக்கு போதனைச் செய்து, பவுலைக் கல்லெறிந்தார்கள்.(19)
- ★ பவுல் கல்லெரியப்பட்டு மரித்ததாக எண்ணி பட்டணத்துக்கு லெளியிலே இழுத்துக்கொண்டுப் போனார்கள்.

- ❑ **தெர்பை::**
- ★ அனேகர் சீஷர்களானார்கள்.(20,21)

- ❑ **மறுபடியும் ,லீஸ்திராவுக்கும்,இக்கோனியாவுக்கும்,அந்தியோகியாவுக்கும் (பீசிதியா)** திரும்பி வந்து சீஷர்களின் மனதைத் திடப்படுத்தினான்.(22)
  - ★ சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தினார்கள்.(23)
- ❑ **பெர்கே, அத்தாலியா, அந்தியோகியா**
  - ★ அங்கே அனேகனாள் சஞ்சரித்தார்கள்.(24 - 28)

Sword of the Spirit



பவுலின் முதலாம் பயணம்

அப். 13:1 – 14:28

- அந்தியோகியா
- செலூக்கியா
- சாலமி , பாப்போ
- பெர்கே
- அந்தியோகியா (பிசீதியா)
- இக்கோனியா
- லீஸ்திரா, தெர்பை
- லீஸ்திரா
- இக்கோனியா , அந்தியோகியா (பிசீதியா)
- பிசீதியா, பம்பிலியா, பெர்கே
- அத்தலியா
- அந்தியோகியா
- எருசலேம் (அப்.15)

உடன் சென்றவர்கள் : பர்னபா, மாற்கு என்னும் யோவான்

Sword of the Spirit

அப். 15 >> யூதேயாவிலிருந்து வந்தவர்களினிமித்தம் தர்க்கம் ::

- “விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்”
- பவுல்,பர்னபா,மற்ற சீஷர்கள் இதைக்குறித்து தீர்மானிக்க மூப்பர்களிடம் (எருசலேம்) போக தீர்மானம்.

  அந்தியோகியா (பெனிக்கே,சமாரியா வழியாய்) எருசலேம்
- பவுல்,பர்னபாவோடு, யூதாவும் (பர்சபா),சீலாவும் அந்தியோகியாவுக்கு வந்தனர்.
- யூதா,சீலா - தீர்க்கதரிகள் :: அனேக வார்த்தைகளினால் சகோதரருக்கு புத்தி சொல்லி,திடப்படுத்தினார்கள்.
- மாற்கு (யோவான்) -பர்னபாவின் இனத்தான் , முதலாம் பயணத்தின் போது பெர்கேவிலிருந்து எருசலேமுக்கு திரும்பிவிட்டான்.
- இரண்டாம் பயணத்தின் போது மாற்குவை அழைத்து செல்ல வேண்டும் என்ற போது பவுல்,பர்னபாவுக்குமிடையே கடுங்கோபமூண்டது.

பர்னபா, மாற்கு → சீப்புரு தீவு / பவுல், சீலா → சீரியா, சிலிசியா

Sword of the Spirit

இரண்டாம் மிஷனரி பயணம்

Sword of the Spirit

அப்.15 : 36 - 18 :22 >> பவுலின் இரண்டாம் மிஷனரி பயணம்

முதல் பயணத்தில், பர்னபா பவுலோடுகூட ஊழியத்துக்கு முக்கிய பங்குவகித்தான். இந்த இரண்டாவது மிஷனரி பயணத்தில், பவுல்,சீலாவை தன்னோடு செல்லும்படியாக தேர்வு செய்தான். பவுலும் பர்னபாவும் ஒன்றாகச் செல்ல விரும்பினர், ஆனால் மாற்குவை(யோவான்) அவர்களுடன் அழைத்துச் செல்வதில் அவர்கள் உடன்படவில்லை.

முதல் மிஷனரி பயணத்தை (மாற்கு) யோவான் ஆரம்பத்திலேயே விட்டுவிட்டான்(அப்.13:13)இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால், பர்னபா மாற்குவை தன்னுடன் அழைத்துச் சென்றான். அவர்கள் சீப்புருதீவுக்கு பயணம் செய்தனர், பவுல் சீலாவை தன்னுடன் அழைத்துச் சென்றான்.

Sword of the Spirit

1. பவுலும் சீலாவும் சீரிய அந்தியோகியாவை விட்டு வெளியேறி. அவர்கள் சீரியா வழியாகவும் சிலிசியாவிலும் பயணம் செய்தார்கள் (அப். 15: 36-41).

2. அவர்கள் தெர்பை மற்றும் லீஸ்திராவில் பணிபுரிந்தனர், அங்கு அவர்களுடன் ஊழியத்தில் தீமோத்தேயு சேர்ந்துக் கொண்டான். அவர்கள் இக்கோனியாவிற்கு பயணம் செய்தார்கள். இந்த நகரங்களில் அவர்கள் சீடர்களை பலப்படுத்துவதிலும், அநேகரை சீஷராக மாற்றி, விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தினார்கள். (அப் 16: 1-5).

Sword of the Spirit

3. அவர்கள் பிரிகியா மற்றும் **கலாத்தியா** பகுதிகளைக் கடந்து சென்றார்கள், ஏனென்றால் ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியானலே தடைப்பண்ணப்ப்ட்டார்கள். பின்னர் துரோவாவுக்கு வந்தார்கள். (அப்16: 6-8).

4. பவுல் மக்கெதோனியாவுக்குச் செல்லும்படியாக ஒரு தரிசனத்தைக் கண்டான்.(அப்.16: 9-12).

5. பிலிப்பியில் அவர்கள் ஸ்திரீகளுக்கு உபதேசித்தார்கள்.கர்த்தர் லீதியாள் என்னும் ஸ்திரீயின் இருதயத்தைத் திறந்தருளினார்.அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.16: 13-15).

6. குறி சொல்லுகிற ஆவியையுடைய பெண் குணமடைந்தாள். அவளுடைய எஜமான் தங்கள் ஆதாயத்தின் நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு பவுலையும்,சீலாவையும் பிடித்து அதிகாரியிடத்தில் ஒப்புக்கொடுத்தான்.பவுலும், சீலாவும்,அடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் வைக்கப்பட்டனர் ,(அப்.16: 16-24).

7. நடுராத்திரியில் பவுலும்,சீலாவும்,ஜெபம் பண்ணி,தேவனைத் துதித்தார்கள்.சிறைச்சாலைத் திறந்தது. சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்டான். (அப். 16: 25-34).

8. பவுல் தங்களை ரோமர்கள் என்று குறிப்பிட்டதால் அதிகாரிகள் பயந்து வந்து,பட்டணத்தைவிட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள். (அப். 16: 35-40).

9. பின்னர் அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள். பவுல் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்த போது திரளான ஜனங்கள் விசுவாசித்து அவர்களைச் சேர்ந்து கொண்டார்கள். விசுவாசியாத யூதர்கள் கூக்குரலிட்டார்கள். (அப். 17: 1-9).

Sword of the Spirit

10. பவுலும் சீலாவும் இரவில் பெரோயாவுக்கு அனுப்பப்பட்டார்கள். தேவவசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதை அறிந்து , யூதர்கள் ஜனங்களை கிளப்பிவிட்டார்கள். பவுல் அத்தேனே பட்டணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். (அப். 17: 10-15).

11. விக்கிரகங்களால் நிறைந்த அத்தேனே பட்டணத்தில் பவுல் பிரசங்கம் பண்ணினான்.(அப். 17: 16-34).

12. பின்னர் கொரிந்து பட்டணத்துக்கு வந்த பவுல் ஆக்கில்லாவையும் , பிரிஸ்கில்லாவையும் சந்தித்தான். கொரிந்துவில், சீலாவும், தீமோத்தேயுவும் பவுலுடன் மீண்டும் இணைந்தார்கள் (அப். 18: 1-5).

Sword of the Spirit

13. கொரிந்துவில், யூதர்கள் ஒருமனப்பட்டு பவுலுக்கு விரோதமாய் எழும்பினார்கள்.(அப். 18: 6-17).

14. பவுல் கொரிந்துவிலிருந்து மீண்டும் சீரியாவுக்குச் செல்லப் பயணம் செய்தான். கெங்கிரேயா வழியாக எபேசுக்குச் சென்றான். எபேசவில் சிறிது காலம் தங்கினான். (அப். 18: 18-21).

15. பின்பு எபேசுவை விட்டு புறப்பட்டு , செசரியா பட்டணத்துக்கு வந்து எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து, அந்தியோகியாவுக்குப் போனா. (அப். 18:22).

Sword of the Spirit

பவுலின் இரண்டாம் மிஷனரி பயணம்



Sword of the Spirit



பவுலின் இரண்டாம் பயணம்

அப்.15:36 – 18:22

- ❖ சீரியா, சிலிசியா
- ❖ தெர்பை, லீஸ்திரா
- ❖ துரோவா
- ❖ சாமோத்திரேக்கே, நெயாப்போலி
- ❖ பிலிப்பி (மக்கெதோனியா)
- ❖ அம்பிபோலி, அப்பொலோனியா
- ❖ தெசலோனிக்கே
- ❖ பெரோயா
- ❖ அத்தேனே
- ❖ கொரிந்து
- ❖ கெங்கிரேயா
- ❖ எபேசு
- ❖ செசரியா
- ❖ எருசலேம்
- ❖ அந்தியோகியா

சென்ற பாதை : சீரியா, துருக்கி, கிரேக்கு, எருசலேம்

உடன் சென்றவர்கள் : சீலா, திமோத்தேயு, பிரிஸ்கில்லா, ஆக்கில்லா, லூக்கா

Sword of the Spirit

மூன்றாம் மிஷனரி பயணம்

Sword of the Spirit

அப். 18:23 - 21:17 >> பவுலின் மூன்றாவது மிஷனரி பயணம்

அந்தியோகியாவிலிருந்து பவுல் மூன்றாவது பயணத்தைத் தொடங்கினான்.

- முதலில் அவர் கலாத்தியா மற்றும் பிரிகியாவிலும் சுற்றித்திரிந்து சீஷரையெல்லாம் திடப்படுத்தினான் (அப். 18:23).
- அப்பொல்லோ எபேசுவிலிருந்து கொரிந்து பட்டண்த்த்திற்கு சென்ற பின் பவுல் அடுத்து எபேசுவுக்குத் திரும்பினான், (அப். 19: 1-41).
- பவுல் மக்கெதோனியாவுக்கு போகப் புறப்பட்டு சீஷர்களுக்கு வெகுவாய் , சீஷர்களுக்கு வெகுவாய் புத்திச் சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான்.பின்னர் துரோவாவுக்கும் ,பின்னர் மிலேத்தே பட்டணத்துக்கும் சென்றான். (அப். 20: 1-38).
- மிலேத்தேவிலிருந்து பவுல் செசரியாவுக்குப் பயணம் செய்து பின்னர் எருசலேமுக்குச் சென்றான். (அப்.21: 1-17).

எபேசுவில்

Sword of the Spirit

1. பவுல் தனது இரண்டாவது பயணத்தில், எபேசு சபையைப் பார்வையிட்டான். (அப்.18: 19-21).

2. அவன் தனது மூன்றாவது பயணத்தை தொடங்கி, முன்பு தொடங்கப்பட்ட சபைகளுக்கு சென்றான். (அப்.18:23).பின்னர் எபேசுவுக்கு வந்தான். (அப்.19: 1).

3. எபேசுவில் யோவான் கொடுத்த ஞாஸ்னானத்தைப் பெற்றிருந்தவர்கள் ,இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்னானம் பெற்றார்கள். பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்.அப்பொழுது அவர்கள் அன்னிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.(அப் 19: 1-7).

Sword of the Spirit

4. பவுல் திறன்னுவின் வித்தியாசலையிலேஅனுதினமும் சம்பாஷித்துவந்தான், இரண்டு வ்ருஷகாலம் தைரியமாய்ப் பிரசங்கித்ததினால் யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். (அப். 19: 8-10).

5. பவுலினிமித்தம் தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.(அப். 19: 11-41).

எபேசுக்குப் பிறகு

6. பவுல் திட்டமிட்டபடி மக்கெதோனியாவையும் , கிரேக்க நாட்டையும் (அகாயா) சுற்றி நடந்தான் (அப்.19:21). பின்னர் அவன் துரோவாவுக்குச் சென்றான். அங்கு பவுல் பிரசங்கிக்கையில் ஐத்திகு தூக்கமடைந்து 3 ஆம் மெத்தையிலிருந்து விழுந்தான்.(அப். 20: 1-12).

7. அடுத்து பவுல் அசோவுக்கும், எபேசுவுக்கும் அருகிலுள்ள கரையோர நகரமான மிலேத்தேவுக்கும் சென்றான். பவுல் எபேசுவிலிருந்து மூப்பர்களை வரவழைத்து,தான் போனபின்பு மந்தையை தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் ,பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிக்க வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று பல ஆலோசனைகளை கொடுத்தான்.அவன் அவர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது இனி அவனைப் பார்க்கமுடியாதென்பதால் அதிகமாய் துக்கப்பட்டார்கள்.(அப். 20: 13-38).

8. பவுல் மிலேத்தேவிலிருந்து கோஸ் தீவையும்,ரோது தீவையும் சேர்ந்து,பத்தாராவுக்கு வந்து,பெனிக்கேவிற்குப் போகிற கப்பலில் ஏறி, சீப்புரு தீவை விட்டு, சீரியா நாட்டிற்கு போகும் வழியில் தீரு பட்டணத்தில் தங்கினான்.அங்கிருந்து பித்தொலோகாமாய்க்கு வந்து பவுலும் , அவனைச் சேர்ந்தவர்களும் செசரியா பட்டணத்திலுள்ள பிலிப்புவின் வீட்டில் தங்கினார்கள்.(அப். 21: 1 - 8)

9. பரிசுத்த ஆவியானவர் அகபு என்னும் தீர்க்கதரிசி மூலம் எருசலேமில் பவுலுக்கு நேரிடப்போகிற காரியங்களை அறிவித்தார். (அப். 21: 9-14).

10. இறுதியாக, எருசலேமை அடைந்தான் (அப். 21:15-17).

Sword of the Spirit

பவுலின் மூன்றாம் மிஷனரி பயணம்



பவுலின் மூன்றாம் பயணம்

அப். 18:23 – 21:16

- கலாத்தியா, பிரிகியா
- எபேசு
- மக்கெதோனியா
- கிரேக்கு (அகாயா)
- மக்கெதோனியா, பிலிப்பி, துரோவா
- ஆசோ, மித்திலேனே, கீயு, சாமே, மிலேத்தே
- கோஸ், ரோது, பத்தாரா
- தீரு, பித்தொலோமாய்
- செசரியா
- எருசலேம்

உடன் சென்றவர்கள் : தீமோத்தேயு, லூக்கா மற்றும் சிலர்

Sword of the Spirit

அப். 21 - 27 >> எருசலேம் மற்றும் செசரியாவில் பவுலுக்கு வந்த எதிர்ப்புகள்

1. விசுவாசிகளான யூதர்களினிமித்தம் சுத்திகரிப்பு தெய்து கொண்டு சுத்திகரிப்பு நாட்களை னிறைவேற்றுவேன் என்றான். (அப். 21: 18-26).
2. ஆசியாவிலிருந்து வந்த யூதர்கள் பவுலின் மேல் குற்றஞ்சாட்டினார்கள்.எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்சேவகரின் சேனாபதி(லீசியா) அறிந்து பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.பவுல் ஜனங்களோடே பேசத்தொடங்கினான்.(அப். 21: 27 - 40).
3. பவுல் தான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டதின் நோக்கத்தை விவரித்துக் கூறினான்.(அப். 22: 1 - 21).
4. தேவன் தன்னை புறஜாதிகளிடத்திற்கு அனுப்பப்போவதாகக் கூறினார் , என்று அவன் சொன்னபோது யூதர்கள் அவனுக்கு விரோதமாய் மிகுந்த சத்தமிட்டார்கள்.நூற்றுக்கு அதிபதி பவுலை அடித்து விசாரிக்கச் சொன்னான். பவுல் தன்னை ரோமன் என்று காட்டியதால் சேனாபதி அவனக் கட்டுவித்ததற்காகப் பயந்தான். (அப். 22: 22 -30).
5. பவுல் ஆலோசனை சங்கத்தாரால் நியாயம் விசாரிக்கப்பட்டான்.கர்த்தர் பவுலை திடப்படுத்தினார். (அப். 23: 1 - 11)
6. பவுலை கொலை செய்யும்படி,யூதர்கள் சிலர் ஒருமனப்பட்டனர்.இதை அறிந்த சேனாபதி (லீசியா), தேசாதிபதியிடம் (பேலிக்ஸ்) அனுப்பினான்.பவுல் ஏரோதின் அரமனையிலே காவல் பண்ணப்பட்டான். (அப். 23:12 - 35)

Sword of the Spirit

அப். 24,25 >> பவுல் விசாரிக்கப்படுதல்

பிரதான ஆசாரியன் - அனனியா + நியாயசாதுரியன் - தெர்த்துல்லு

பவுல்

தேசாதிபதி - பேலிக்ஸ்

(அப். 24: 1 - 9)

(அப். 24: 10 - 21)

1. பேலிக்ஸும், அவன் மனைவி துருசில்லாவுடனே வந்து பவுலை அழைத்து,கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்துச் சொல்லக் கேட்டான்.பவுல் பணம் கொடுப்பானென்றெண்ணி, அவனை அழைத்து அவனோடு பேசினான்.2 வருடம் கழித்து பொர்க்கியுபெஸ்து என்பவன் தேசாதிபதியாக வந்தான்.(அப். 24: 22 - 27)
2. பெஸ்து பவுலை விசாரித்தான்.(அப். 25: 6 - 11)
3. பவுல் இராயனுக்கு அபயமிட்டான்.(அப். 25: 11,12)

யூதர்கள்

தேசாதிபதி - பொர்க்கியுபெஸ்து

பவுல்

4. அகிரிப்பா ராஜாவும், பெர்னீக்கேயாளும் நியாயஸ்தலத்தில் பிரவேசித்தார்கள்.அகிரிப்பா , பவுல் பேசுவதைக் கேட்க மனதாயிருந்தான்.(அப். 25:13 - 27)

Sword of the Spirit

அப். 26 >> அகிரிப்பா ராஜாவிடம் பவுல் விளக்கம்

பவுல்

அகிரிப்பா

பெஸ்து

பவுல்::

- ★ மரித்தோர் உயிர்த்தெழுதலில் கிறிஸ்து முதல்வர்.
- ★ சுயஜனங்களுக்கும், அன்னிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவர்.

- ➢ பெஸ்து :: பவுலே நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்கு பயித்தியமுண்டாக்குகிறது.(24)
- ➢ அகிரிப்பா :: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய்.(28)

Sword of the Spirit

பெஸ்து

அகிரிப்பா

பெர்னீக்கேயாள்

இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை

Sword of the Spirit

ரோமாபுரி பயணம்

Sword of the Spirit

அப். 27,28 >> பவுலின் ரோமாபுரி பயணம்

1. பவுலும் காவலில் வைக்கப்பட்டிருந்த சிலரும், இத்தாலியா தேசத்துக்குப் போகும்படி யூலியு என்னும் நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவிக்கப்பட்டார்கள்.(அப். 27:1)
2. செசரியாவிலிருந்து சீதோன் துறையைப் பிடித்து,பின்பு மீறா பட்டணத்தில் சேர்ந்தார்கள். (அப். 27: 2-5).
3. வெகுகாலம் சென்றதால் கப்பல் யாத்திரை மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று பவுல் எச்சரித்தான். நூற்றுக்கு அதிபதியோ மாலுமியையும் கப்பல் எஜமானனையும் அதிகமாய் நம்பினான். யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று கப்பலில் மோதிற்று.(அப். 27: 6 - 15).
4. நம்பிக்கை முழுவதும் அற்றுப் போயிருந்த நிலையில் ,தேவனுடைய தூதன் பவுலை திடப்படுத்தினதினிமித்தம், அவன் கப்பலிலுள்ளவர்களைத் திடப்படுத்தினான்.(அப். 27: 16 - 25)
5. கப்பல் கடலிலே மிகவும் அலைவுப்பட்ட போதிலும்,பவுல் சொல்லியிருந்ததுபோல மெலித்தா தீவிலே கரை சேர்ந்தார்கள்.(அப்.27 :26 - 28 :1)
6. மெலித்தா தீவிலே விரியன் பாம்பு பவுலின் கையைக் கவ்விக்கொண்டதைக் கண்ட தீவார், இவன் கொலை பாதகன் என்றார்கள். அவன் ஒரு தீங்கும் அடையாதிருந்ததைக் கண்டு , பின்னர் அவனை தேவன் என்று சொல்லிக் கொண்டார்கள். அங்கே 3 மாதம் இருந்த போது பவுல் வியதிக்காராரை குணமாக்கினான்.(அப். 28:1 -11)
7. சீரகூசாவில் மூன்று நாள் தங்கி, புத்தேயோலியில் சகோதரரைக் கண்டு , 7 நாட்கள் அவர்களோடிருந்து ,பின்னர் ரோமாபுரிவைச் சேர்ந்தார்கள்.(அப். 28:12 - 16)

Sword of the Spirit

பவுலின் ரோமாபுரி பயணம்

அப். 21:17 – 28:31

- எருசலேம்
- அந்திப்பத்திரி, செசரியா
- சீதோன், மீறா, கினீது
- நல்ல துறைமுகம்
- கிலவுதா
- மெலித்தா
- சீரகூசா, ரேகியு, புத்தேயோலி
- அப்பியுபுரம், மூன்று சத்திரம்
- ரோமாபுரி

உடன் சென்றவர்கள் : ரோம போர்ச்சேவகர்கள், லூக்கா மற்றும் பலர்.

Sword of the Spirit

அப். 28 : 17 - 31 >> ரோமாபுரியில் பவுல்

பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்குப்படி உத்தரவு பெற்றுக்கொண்டான். 3
நாளைக்குப் பின்பு யூதர்களில் பிரதானமானவர்களை அழைத்துப் பேசினான்.(அப்.28 :17)

- ★ மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை போதித்தான்.
- ★ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிக் கொடுத்து விவரித்துப் பேசினான்

- ❑ சிலர் விசுவாசித்தார்கள் .
- ❑ சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.(24)

தேவனுடைய இரட்சிப்பு (28)

- ★ **புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.**
- ★ **புறஜாதிகள் அதற்குச் செவிகொடுப்பார்கள்.**

பவுல்

- ★ தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக் கொண்டான்.
- ★ மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றினான்.
- ★ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்தான்.
- ★ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதெசித்தான்.

Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

Sword of the Spirit